**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 272/2024** **நாள் 09.03.2026.**

**வாசா.1, திரு.ராஜாராம்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 5ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

நான் எஸ்.எஸ்.எல்சி படித்துள்ளேன். நான் வ.புதுப்பட்டி ஊரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு பூர்வீகமே வ.புதுப்பட்டி ஊர் தான். நான் இவ்வழக்கின் வாதிகளான சுபத்ரா, தீபக், கிருத்திகா ஆகியோர்களின் பொதுஅதிகார முகவர் என்ற நிலையில் வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன். வழக்கில் 1ம் வாதி சுபத்ரா என் அக்காள் மகள். வழக்கை தாக்கல் செய்துகொள்ள வழக்கறிஞரிடம் நான் தான் விபரம் சொன்னேன். வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விபரங்கள் பற்றி எனக்கு தெரியும். வழக்குரை சொத்துக்கு வடக்கு பக்கம் 5ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி நிலத்துக்கும் வாதிகளின் நிலத்திற்கும் இடையில் ஒரு தென்வடலாக பொது நடைபாதை செல்கிறது என்றால் சரிதான். இந்த பொதுநடைபாதையை வழக்கில் உள்ள 1ம் வாதியின் கணவர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் அப்படியில்லை. 1ம் வாதியின் கணவர் அவ்வாறு ஆக்கிரமித்து தான் கட்டியுள்ளார் என்றும் நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் இவ்வழக்கில் 5ம் எதிர்வாதிக்கு எதிராக எந்த பரிகாரங்களும் கோரவில்லை என்றால் சரிதான்.எனவே 5ம் எதிர்வாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும்கோரவில்லை என்பதால் 5ம் எதிர்வாதியை பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.